37 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

“சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே”

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ACC-NO-10813

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 24-4-33

சீமையில் முட்டை பொரிக்க



இங்க்லாந்தில் கூட்டுக் கமிட்டி என்ற ஒரு பெரிய முட்டை யிருக்கிறதாம். அதை அடை காத்து குஞ்சு பொரிக்க வேண்டுமாம். அதற்காக இந்தியாவினின்று பல ஜாதி பட்சிகளும் போய்க் கொண்டிருக்கின்றன. சீமைப் பட்சிகளும் சேர்ந்து அம் முட்டையைப் பொரிக்குமாம். இத்தனை பட்சியினாலும் அடை காக்கப்பட்ட முட்டையில் குஞ்சு ஏதேனும் உண்டா? அப்படியே குஞ்சு வந்தாலும் அது என்ன லக்ஷணமா யிருக்குமென்பது இப்போதே தெரிகிறதே!

திண்ணையில் குந்தி யிருக்க

சிமையில் பார்லிமெண்டு கமிட்டி கூடப் போகிறது. அதில் 'வேலை' செய்வதற்காக 28 இந்தியர்களை பிரிட்டிஷார் அழைத்தனர். ஸாப்ரு, ஜயகர், பாத்ரோ, கிருஷ்ணமாச்சாரி முதலிய பேர்வழிகள் விழுந்தடித்துக் கொண்டு 22ம் தேதியே 'வைஸ்ராய் ஆப் இந்தியா' என்ற கப்பலில் புறப்பட்டு விட்டனர். வேடிக்கை பார்க்க சென்னை ராமசாமி முதலியாரும் தொடர்ந்தாராம். இனி ஹிந்து ஆசிரியர் அரங்கசாமி அய்யங்கார் சென்னையினின்று புறப்பட வேண்டியது தான் பாக்கி.

கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டியில் இந்த 28 பேருக்கும் என்ன வேலையென்று கேட்கலாம்! "என் வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போய் வருகிறார்" என்பது போன்ற வேலை தான் இவர்களுக்கும். கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டியார் ஒரு வீட்டில் கூடிப் பேசிக் கொண்டிருப்பார்கள். அந்த வீட்டின் ரேழியிலோ, திண்ணையிலோ இந்த இந்திய அம்மாஞ்சிகள் குந்திக் கிடக்க வேண்டும். உள்ளே யாராவது சாக்ஷியம் சொல்ல வேண்டுமானால் அந்த இந்தியனைத் துரைகள் கூப்பிடுவார்கள். உள்ளே போய் சாக்ஷி சொல்ல வேண்டும். அந்தக் கமிட்டியில் வோட்டு செய்யவோ, இஷ்டப்படி பேசவோ இந்த இந்தியர்களுக்கு துளி அதிகாரமும் கிடையாது. ஆனால் "நாங்களும் கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டிக்குப் போகிறோம்" என்று பெருமை பேசிக் கொள்கிறார்கள். இப்படி சொல்லிக் கொள்ள இவர்களுக்கு வெட்கமாக இல்லையா?

இந்திய மண்ணுக்குப் பிறந்த இந்த 28 பேரும் இன்றைக்குச் செய்யும் செயல் தேசத்துக்கே பரம அவமானம் உண்டாக்குவது. அது மட்டு மன்று. இவர்களுடைய யாத்திரை தேசத் துரோகமு மாகும். ஆனால் இவர்கள் யாருடைய பிரதிநிதிகள்? இந்தியர்களால் தேர்ந் தெடுக்கப் பட்டவர்களா? இல்லை, இல்லை. யாரார் சர்க்காருக்கு மிருதங்கம் வாசிப்பார்களோ, அப்பேர்ப் பட்டவர்களாகவே சர்க்கார் தேர்ந்தெடுத்து அழைத்துக் கொண்டு போயிருக்கின்றனர். ஆகவே, இந்த சாக்ஷிகள் இந்தியப் பிரதிநிதிகளன்று. இந்தக் கூட்டுக் கமிட்டியின் பயனாக வெளி வரும் அரசியல் திட்டத்தை இந்திய மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது திண்ணம்.

மின் வெட்டு

மிஸ்டர் போலக் கண்டனம்

இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டுத் திரும்பியுள்ள திரு. எச். எஸ். எல். போலக் லண்டனில் ஒரு கூட்டத்தில் பேசினார். இந்தியாவின் அரசாட்சிக்கும், பொது ஜனங்களுக்கும் பிளவு பலமா யிருக்கிறதென்றும், பிரிட்டிஷாரின் நல்ல குணத்திலும், நீதியிலும், யோக்கியதையிலும் இந்தியருக்கு சந்தேகம் வந்து விட்டதென்றும், அகிம்ஸா தர்மத்தின் மீது பல இளைஞர்களுக்கு நம்பிக்கை இழந்து வருகிறதாகவும், குடியேற்ற நாட்டு அந்தஸ்து இல்லாத வரையில் இந்தியாவை சாந்தப்படுத்த முடியாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகக்ஷேமத்திற்கு

உலகத்துக்கு இப்போது ஏற்பட்டுள்ள தீங்குகளைப் போக்குவதற்காக 21 பெரியார்களடங்கிய ஓர் கமிட்டியை பண்டிதர் ஈன்ஸ்டின் கூட்டப் போகின்றாராம். உலகில் புகழ் பெற்றவர்களாயும், மேதாவிகளாயும், தாராள சிந்தையுடையவர்களாயும் உள்ளவர்களே மேற்படி கமிட்டியில் இருப்பார்களாம். இந்தக் கமிட்டிக்கு தலைமை வகிக்க யார் தகுந்தவரென்பதைச் சொல்லவும் வேண்டுமா? இந்தியாவிலுள்ள மகாத்மா தான் சரியானவர். ஆனால் அவரைப் பிரிட்டிஷ் அரசு சிறையில் வைத்திருக்கிறதே என் செய்வது?

பதிலுக்குப் பதில்!

ருஷியச் சாமான்களின் மீது பிரிட்டன் அதிக வரி விதித்த செய்கைக்குப் பதிலுக்குப் பதில் செய்து விட்டது ருஷியா! பிரிட்டனிடமிருந்து எந்தச் சாமானும் வாங்கக் கூடாதென்றும், பிரிட்டிஷ் கப்பல்களில் சாமான்கள் ஏற்றக் கூடாதென்றும், ருஷியத் துறைமுகத்தில் வரும் பிரிட்டிஷ் கப்பல்கள் அதிக 'ஆயம்' செலுத்த வேண்டு மென்றும் சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த கலாட்டா எங்கே போய் முடியுமோ?

கதர் உறுத்துமோ?

ஆள்வார் மகாராஜா தமது தர்பார் பிரசங்கத்தில் இனி சுதேசித் துணிகளையே தாம் உபயோகிப்பதென்று சபதம் பூண்டிருப்பதாகக் கூறினாராம். சந்தோஷம். ஆனால் கதர் தரித்துக் கொண்டால் அவருக்கு உடல் உறுத்துமோ?

ரங்கஸ்வாமிக்கு தசை!

ஏப்ரல் 7-ம் தேதி யன்று 'ஹிந்து' பத்திரிகை எழுதிய தலையங்கத்துக்கு பதினைந்தே நாட்களில் பலன் கிடைத்து விட்டது. 'ஹிந்து' பத்திரிகையின் ஆசிரியரான ரங்கஸ்வாமி அய்யங்காரையும் சீமையில் நடக்கும் கூட்டுக் கமிட்டிக்கு வந்து சேருமாறு சர்க்கார் கேட்டுக் கொண்டிருக்கின்றது. ரங்கஸ்வாமி அய்யங்காரும் போகத்தான் போகிறார்.

இதே அய்யங்கார் முன்னே இரண்டாவது வட்ட மேஜைக்குப் போன கதையை நாம் மறந்து விடவில்லை. மகாத்மாஜி வட்ட மேஜைக்குப் போவதா, வேண்டாமா வென்று பம்பாயில் காங்கிரஸ் தலைவர்கள் ஆலோசித்துக் கொண்டிருந்தனர். அப்போது ரங்கஸ்வாமி அய்யங்கார் என்ன செய்தார்? காந்திஜி புறப்படட்டு மென்று காத்திருந்தாரா? இல்லை. முந்திரிக் கொட்டை மாதிரி முதற் கப்பலிலேயே புறப்பட்டுப் போய் விட்டார்.

அதே மாதிரி இப்போது காந்திஜியும், இதர தேச பக்தர்களும் சிறையில் கிடப்பதைப் பற்றி ரங்கஸ்வாமிக்கு கவலை யிருப்பதாகத் தோன்றவில்லை. "சிறையில் கிடப்பது அவர்கள் தலை விதி. சீமைக்குப் போவது எங்கள் தலை விதி" என்று சொல்லிக் கொண்டு பிரயாணப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ரங்கஸ்வாமி அய்யங்கார் சீமைக் கமிட்டிக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டதைக் குறித்து 'சுதேசமித்திர'னின் டெல்லி நிருபர் அந்தப் பத்திரிகைக்கு ஒரு செய்தி அனுப்பினர். சுதேசமித்திரன் கம்பெனியின் மானேஜிங் டைரக்டருக்குக் கிடைத்த பாக்யத்தைக் கூறிவிட்டு ரங்கஸ்வாமி அய்யங்காரைப் பற்றி நாலு அத்தியாயம் புகழ்ந்து அந்நிருபர் எழுதினர். ரங்கஸ்வாமி அய்யங்காரைப் பற்றிய ஸஹஸ்ர நாமத்தை 'சுதேசமித்திரன்' பத்திரிகை கூடப் பிரசுரிக்கா விட்டால் வேறு யார் போடுவது?

ஆனல் அந்தப் புகழ் மொழிகளுள் ரங்கஸ்வாமி அய்யங்கார் ஒரு காங்கிரஸ் வாதி யென்று வருணிக்கப் பட்டிருப்பதைப் பார்த்துச் சிரிப்பு வருகிறது. வி. பி. ராமஸ்வாமி, சாப்ரூ இவர்கள் எவ்வளவு காங்கிரஸ்காரர்களோ, அவ்வளவே தான் அரங்கசாமியும்!

நல்ல காரியங்கள் செய்யும் தருவாயில் நான் 'மாஜி சுமங்கலி' என்று சொல்லிக் கொண்டு ஒருவள் நுழைந்தால் அதற்காக மரியாதை உண்டா? அதே மாதிரி தான் 'மாஜி காங்கிரஸ் காரன்' என்று சொல்லிக் கொள்வது மாகும்.

சாஸ்திரி சவடால்

கூட்டத்தில் சவடால் அடிப்பதில் வலங்கிமான் சீனிவாச சாஸ்திரி பெயர் பெற்றவர். அவர் ராஜமஹேந்திரவரத்தில் ஒரு கூட்டத்தில் பேசிய போது கொஞ்சம் தலைக் கிறுக்காகப் பேசி யிருக்கின்றார்.

"காங்கிரஸ் என்பது ஒரு குடும்பம். அக் குடும்பத்தின் காரியங்களை கவனித்து வந்தவர் காந்தி. குடும்பக் கஷ்டம் அதிகரித்த போது சிலர் காஷாயம் தரித்து சந்யாசம் வாங்கிக் கொண்டு ஓடிப் போவதுண்டு. அதே மாதிரி நம் தேசத்துக்கு நெருக்கடி நேர்ந்த இச்சமயத்தில் காந்தி சவுக்கியமாக ஜெயிலில் போய் ஒளிந்து கொண்டு விட்டார்" என்று சாஸ்திரி அப் பேச்சில் குறிப்பிட்டார்.

இந்த சாஸ்திரி போன்ற 'குலாம் கும்பல்' சர்க்காருக்கு இச்சகம் பேசிக்கொண்டு அலைவதினுல் தான் காந்தியடிகள் இன்னமும் சிறையில் கிடக்க வேண்டி யிருக்கிறது. ஆகவே காந்திஜி இன்னமும் சிறையில் இருப்பதற்கு சர்க்காரோடு ஒத்துழைப்பவர்கள் தான் காரணஸ்தர். இவ்வளவு நடந்த பின்னரும் அறிந்து கொள்ளாத இந்த சாஸ்திரியாரின் குறுகிய புத்தியைக் காண அவரைப் பெற்றெடுத்த தஞ்சை ஜில்லாவுக்கே அவமானமா யிருக்கிற தாம்.

'தேசத்தின் பொறுப்பை நிர்வகிக்கப் பயந்து விட்டார் காந்திஜி' என்று சாஸ்திரி சொல்வது அவரது நன்றி மறந்த தன்மையையே காட்டுகின்றது. இதே சாஸ்திரிகள் தமக்கு தென் னாப்பிரிக்கா ஏஜெண்டு பதவி கிடைக்கவேண்டுமென்று தவம் செய்ததையும், காந்தியடிகளின் திருக் கையினல் 'யங் இந்தியா'வில் சிபார்சுக் கட்டுரை ஒன்று தோன்றவே அப்பதவி சாஸ்திரிக்குக் கிடைத்த தென்பதையும் நாமறிவோம். அப்படி உதவிய அருள் உருவான காந்தியடிகளை, அவர் வெளியே யில்லாத சமயம் பார்த்து சாஸ்திரிகள் மனம் போனவாறு பேசுவது அவரது 'குள்ள'ப் புத்திக்கே அத்தாட்சி யாகின்றது.

இந்த சாஸ்திரிகளும், சாப்ரூக்களும் இத்தனை நாள் தேசத்தைப் பாழாக்கியது போதாதா? இவர்களது ராஜீயமோ கட்டை வண்டி ராஜீயம். ராஜீய உலகில் ஏரோப்ளேன் பறக்கின்ற இக்காலத்தில் இந்த வண்டிகளின் போக்கு எடுபடுமா?

நமது சல்லடைக் குறிப்புகள்

நிமிஷத்திற்கு 16 பிள்ளை!

இந்தியாவின் ஜனக் கூட்டம் எப்படி அதிகரித்து வந்திருக்கிற தென்பதை அடியிற் கண்ட கணக்கு காட்டும்.

1872	௵த்தில்	20	கோடியே	60	லக்ஷம்
1881	„	25	„	30	„
1891	„	28	„	70	„
1901	„	29	„	40	„
1911	„	31	„	50	„
1921	„	31	„	90	„
1931	„	35	கோடியே	20	லக்ஷம்

ஸபாஷ்! 1872ம் ௵த்திலிருந்ததைப் போல் ஒன்றே முக்கால் பங்கு கூட்டம் இப்போது இருந்து வருகிறது. 60 வருஷ காலத்துக்குள் 15 கோடி ஜனங்களை விருத்தி செய்திருக்கிறோம். என்ன வேகம்! ஒவ்வொரு நிமிஷத்திலும் இந்தியாவில் 16 புதுக் குழந்தைகள் பிறப்பதாகக் கணக்கு எடுக்கப் பட்டுள்ளது. இந்த அடிமை நாட்டுக்கு ஒவ்வொரு தினத்திலும் 23,500 அதிகப் பிரஜைகள் உற்பத்தி யாக்கப் படுகின்றனர். பிள்ளை பெறும் இந்த வித்தை ஒன்றில் தானா நாம் சுறுசுறுப்பா யிருக்க வேண்டும்?

நிற வித்தியாசம் இல்லையா?

‘ஈஸ்ட் இந்தியன் ரெயில்வே’ நிர்வாகம் தனது சிப்பந்திகளின் குழந்தைகளுக்காக பள்ளிக் கூடங்களை நடத்தி வருகிறது. ஐரோப்பிய, ஆங்கிலோ இந்தியக் குழந்தைகளின் பள்ளிக் கூடமாகிய ‘எக்ரோவ்’ பள்ளிக் கூடத்திற்கு 1931-32 ௵த்தில் 162847 ரூபா செலவழித்திருக்கிறார்கள். ஆனால் இந்தியக் குழந்தைகள் படிக்கின்ற 29 பள்ளிக்கூடங்களுக்கு 75356 ரூபாய் தான் செலவழித்திருக்கிறார்கள். இந்தக் கணக்கைப் பார்த்த பின்னரும் “நாங்கள் நிற வித்யாசம் பாராட்டுவதில்லையே!” என்று ரயில்வே போர்டு சொல்லிக் கொண்டிருப்பது தான் அதிசயம்.

தங்கம் அனுப்பினால் தண்டனை!

மேற்கே அமெரிக்காவில் தங்க மதிப்புத் திட்டம் தடுமாறி விட்டது. அமெரிக்காவினின்று தங்கத்தை எவரும் பிற நாடுகளுக்கு அனுப்பக் கூடாதென அக்ராசனாதிபதியான ரூஸ்வெல்ட் உத்தரவு போட்டு விட்டார். யாராவது மீறி அனுப்புவார்களானால் பதினாயிரம் டாலர் அபராதமும் இல்லாவிடில் பத்து வருஷச் சிறை வாசமும் அனுபவிக்க வேண்டுமென மிகக் கடுமையாக சட்டம் செய்யப்பட்டிருக்கிறதாம். தங்கள் நாட்டின் தங்கத்தைக் காப்பாற்ற அமெரிக்கர் இவ்வளவு மும்முரமா யிருக்கின்றனர். ஆனால் கிழக்கே இந்தியாவிலோ 120 கோடி ரூபாய்க்குமேல் பொறுமானமுடைய தங்கம் நாட்டை விட்டு ஓடிப்போய் விட்டது. இன்னமும் போய்க் கொண்டே யிருக்கிறது. இந்திய அரசாங்கமோ தங்க ஏற்றுமதியைத் தடுக்கச் சட்டம் செய்ய வில்லை. ஏதோ சால் ஜாப்புகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. அமெரிக்க நாடு ஓங்குவதற்கும், இந்தியா வரவர தாழ்வதற்கும் என்ன காரணங்கள்? ஆங்காங்குள்ள அரசாங்க முறைகளே யன்றோ!

வாங்கின வரியைத் திருப்பிக் கொடு

பம்பாய் நகருக்கு அருகில் ‘வில்லி பார்லி’ என்ற ஊர் இருக்கின்றது. அந் நகரில் ஒரு முனிஸிபாலிட்டி யிருப்பதற்கு பம்பாய் துரைத்தனம் அநுமதித்தது. ஆனால் முனிஸிபல் அதிகாரிகள், பம்பாய் மாகாண கமிஷனரிடமிருந்து உத்தரவு பெற்றுக் கொள்ள வில்லையாம். ஆனால் 53 ஆயிரம் ரூபாய்க்கு மேல் முனிஸிபாலிட்டி வரி வசூலித்து விட்டது. கமிஷனர் அநுமதி யின்றி முனிஸிபாலிட்டி வரி வசூலித்தது சட்ட விரோதம் என்று ஒருவர் ஸிவில் வியாஜ்யம் போட்டார். முனிஸிபாலிட்டி வாங்கின வரிப் பணத்தை திரும்பக் கொடுத்து விட வேண்டு மென கோர்ட்டார் நீதி வழங்கி யிருக்கின்றனர். இனிமேல் கோர்ட்டுக்கு முனிஸிபாலிட்டி போகப் போகின்றதாம்! 53 ஆயிரம் ரூபாயை திடீரென்று எப்படி திருப்பிக் கொடுப்பதென்று முனிஸிபாலிட்டி திண்டாடுவது இயற்கை தானே!

கவர்னருக்கு வேறென்ன வேலை?

கான்பூரில் துணி ஆலைகளில் தொழிலாளர் வேலை நிறுத்தம் மும்முரமாகி வருகிறது. 5000த்துக்கு மேற்பட்ட தொழிலாளிகள் வேலைக்கு வரவில்லை. சில பிரமுகர்கள் இந்த வேலை நிறுத்த விஷயமாகப் பேசவேண்டு மென்று ஐக்கிய மாகாண கவர்னரிடம் சென்றார்கள். கவர்னர் பேட்டி கொடுக்க மறுத்து விட்டாராம். இதை விட கவர்னருக்கு வேறென்ன வேலையோ?

ஏர் விழா

(பெண்ணாடம், சிவகுருநாதன்)

தமிழர்கள் தொன்மைக் காலத்து உழவர்கள். எடுத்ததற்கெல்லாம் திருவிழா கொண்டாடுதல் தமிழர் மரபு. உண்டிக்கு முதற் காரணம் உழவு அல்லவா! உழவிற்கு ஓர் விழா வேண்டாமா?

இவ்வாண்டுப் பிறப்பன்று அவ் விழா நடைபெற்றது. ஏர் விழாவாவது :—புது ஏருக்கு பூவிடுவார்கள்: மஞ்சள் பூசுவார்கள்; அங்ஙனமே ஏர் மாடுகளுக்கு மாலை யிட்டு மஞ்சள் பூசுவார்கள். நல்ல நாழிகையில் இறைவனை வணங்கி ஏர் பூட்டுவார்கள். சிறப்பு மிக்க செல்வன் முதல் சிறு பிள்ளை யீறாக அன்று ஏர் பிடித்து சிறிது நேரம் உழுவார்கள். இவ் விழாவில் பழந் தமிழர் (ஆதித்திராவிடர்)களும் கலந்து கொள்ளுவார்கள். ஏர் உழுது வீடு வந்ததும், மனைவி மக்கள் மகிழ்ச்சியுடன் உழவர்களை வரவேற்பார்கள். அனைவருங் கூடி ஏர் விழாவை இனிது நிறைவேற்றுவர்.

இவ்வாண்டு ஏர் விழா எங்ஙனம் நடைபெற்றிருக்கு மென நினைக்கின்றீர்கள்? மனிதர்க்கு ஏற்பட்ட மகிழ்ச்சியின் பயனைக் கொண்டாடுவது திருவிழா! இவ்வாண்டு உழவனுக்கு மகிழ்ச்சி யில்லை. அவன் மனம் புழுங்கினாலும். கொண்டாடும் வழக்கத்திற்காக கொண்டாடினான்.

இவ்வாண்டு ஏர் உழுது வீடு வந்தான். வரிப் பணத்திற்குத் தலையாரி தண்டோராப் போட்டான். செவியுற்றான் உழவன். என் செய்வதென ஏக்கமுற்றான்.

ஓர் புறத்தில் கடன் காரர்கள் வீட்டை வந்து காவல் காத்துக் கொண்டிருக்கின்றனர். சென்ற ஆண்டே மனைவி மக்கள் காதிலும் கழுத்திலும் இருந்தவைகளைக் கழற்றி வரிப் பணங் கொடுத்தாயிற்று. இவ்வாண்டு என் செய்வதென்று ஏழை உழவன் ஏக்க முறுகிறான்.

"உழவன் கணக்குப் பார்த்தால் உழவுக் கட்டையும் மிஞ்சாது" என்ற பழமொழி உண்மையாதலால் உணர்ந்து உருகுகிறான். வீடு வாசல்களும், தட்டு முட்டுச் சாமான்களும் ஜப்தியாதலை எண்ணித் தளர்ச்சி யுறுகிறான்.

எத்தனை நாளைக்கு இவர்கள் வாழ்வு இப்படியிருப்பது? எண்ணற்கரிய புதுமைகளைக் கண்டு பிடிக்கும் இக்காலத்தில் ஏழை உழவன் கண்ணீரைப் போக்க வழி யில்லையோ! இந்திய ஆட்சி நம் கையிலில்லாததால் இவ்வளவு கஷ்டமும் என்பது இன்னமும் விளங்கவில்லையா?

இந்தியாவை ஏமாற்றினால்

(பார்லிமெண்டு மாஜி அங்கத்தினரான பீட்டர் பிரீமன் எழுதியது)

எழுபத்தைந்து வருஷங்களாக இங்கிலாந்து, இந்தியாவிற்களித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுக்கிறது. நாகரீகம், நீதி என்று தன் நாட்டு மக்களை நடத்துவது போன்று, இந்தியர்களையும் மனிதர்களாக நடத்த இங்கிலாந்து விரும்ப வில்லை.

இது இராஜ தந்திரமா? இது தான் யோக்கியதையா? இந்தியாவின் நியாயமான சிறிய கோரிக்கைகளை மீண்டும் குறிப்பிடுகிறேன் :—

ஆங்கிலேயர் இங்கிலாந்திலிருப்பது போன்று இந்தியர்களும் சுதந்திரமாகத் தம் நாட்டிலிருக்க வேண்டும்.

தங்கள் உரிமையைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தம் மனிதர்களால் அரசாங்கத்தை நடத்த இந்தியர் விரும்புகின்றனர்.

தன் விருப்பப்படி மந்திரி சபைகளை அமைக்கவும், கலைக்கவும்,

ஆயுதங்களைத் தாங்கும் உரிமை, சேனையை நிர்வகிப்பது, கடற் படை வைத்துக் கொள்ளுதல், இச்சா சேவகர்களை வைத்துக் கொள்ளுதல்,

தன்னிஷ்டப்படி வரி விதித்தல், வரவு—செலவு திட்டந் தயாரித்தல்,

தன்னிஷ்டப்படி கல்வித் திட்டம் போடுதல், தன்னிஷ்டப்படி விவசாயஞ் செய்தல், சுரங்கந் தோண்டுதல், நாணயஞ் செய்தல் முதலியவைகளை இந்தியர் கோருகின்றனர்.

இங்கிலாந்துக்குச் சமமான நாடாக விளங்குதல்; அதே சமயத்தில் ஆங்கிலேயர் இங்கிலாந்திலிருப்பதைப் போல் இந்தியாவில் இந்தியர் சுதந்திரமாக வாழ்தல், இவைகளே இந்தியா கோருவன.

இனி இந்தியா காத்திருக்காது. இந்தியாவின் சக்தியையும் உணர்ச்சியையும் இனி தடுக்க முடியாது. இந்தியா சுதந்திர மடைய வேண்டும். உலகத்திலுள்ள ஏனைய பெருந் தேசங்களைப் போன்று சுதந்திரம் பெற்று வாழ வேண்டும். நம்முடைய சாம்ராஜ்யத்தில் சேர்ந்த நாடாக இந்தியா இருக்க வேண்டுமா, இல்லையேல் ஓர் அன்னிய அரசாங்கமாக மாறி விட வேண்டுமா என்பது தான் இப்போதைய கேள்வி.

கப்பல் 'ஷோக்' இல்லையா?

(திப்பு எழுதியது)

இந்த வருடம் என்னால் வெய்யில் தாள முடியவில்லை. யாராவது எனக்குச் செலவு தொகை தந்து ஐரோப்பாவுக்கு அனுப்பலாகாதா? மேனாடுகளில் எப்படி க்ஷவரம் பண்ணிக் கொள்கிறார்கள், ஐரோப்பியருக்கு ஜீரண சக்தி உண்டா என்று எதையாவது கடுமையாக ஆராய்ச்சி செய்து விட்டுத் திரும்புவதற்கு நான் தயார் தான். ஆனால் அனுப்புவார்களைக் காணோமே என் செய்வது?

ராஜீய உலகிலும் இனமாக இப்போது கப்பல் சவாரிகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. முதல் வகுப்பு டிக்கட், தினந்தோறும் படிச் செலவு, டின்னர்கள், அடடா பரம சுகம்! அநேகம் பேர் சர்க்கார் தரும் காசில் மிச்சம் பிடித்துக் கொண்டு திரும்பி விடுவார்களென்பதும் நிச்சயம். ஆனால் எனது ராஜீய அபிப்பிராயத்துக்கும் சர்க்கார் அபிப்பிராயங்களுக்கும் மலைக்கும் மடுவுக்கு மாயிருக்கிறது. கஸ்னாவியைப் போல எனக்கு ஸலாம் போடத் தெரியாது. ஸாப்ருவைப் போல வௌவால் வேஷம் யானறியேன். அரங்கசாமி அய்யங்காரைப் போல காக்கை பிடிக்கும் வித்தையையும் நான் கற்றுக் கொள்ளவில்லை. ஆகவே எனக்கு கப்பல் யாத்திரையை சர்க்கார் ஒரு போதும் தரப்போவதில்லை.

இந்திய ராஜீய வாதிகளைக் குல்லா போட பிரிட்டிஷார் அநேக தந்திரங்களைக் கையாள்கிறார்கள். ஏதாவதோர் ராஜீயவாதி கொஞ்சம் முறைத்தால் அவனுக்குப் பெரிய உத்யோகத்தைக் கொடுத்து விடுவதும், சம்பளத்தை உயர்த்துவதும் பிரிட்டிஷார் வெகு நாளாகச் செய்து வரும் தந்திரம். பிறகு ஸர், ராவ் பகதூர் முதலிய பட்டங்களைத் தந்து சில பேரை அமுக்கி விடுவார்கள். மிஸ்டர் மான்டேகுவின் அமுலுக்குப் பின்னர் இன்னொரு சூழ்ச்சியும் ஆரம்பிக்கப் பட்டது. பசியெடுத்த ராஜீய வாதியை சர்க்கார் செலவில் கப்பல் யாத்திரை அனுப்புவதென்ற துர் வழக்கம் மான்டேகுவால் தான் ஆரம்பிக்கப் பட்டது. முதன் முதலில் ராயல் கமிஷன்களுக்குத் தான் இந்த கப்பல் யாத்திரை சுகம் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது ஒட்டை, ஒடசல் ராஜீய வாதிகளுக்குக் கூட கப்பல் யாத்திரை சுகம் சர்க்காரால் தரப்பட்டு வருகிறது.

வாஷிங்டன், ஜினிவா, ஒட்டாவா, டோரன்டோ, லண்டன் இந்த நகரங்களுக்கு எத்தனை கண்ட்ராவிகள் போய்க் கொண்டும் வந்து கொண்டுமிருக்கின்றன. சுட்டுப் போட்டாலும் வாயில் ராஜீயச் சொற்கள் நுழையாத பேர் வழிகளுக்கும் இந்த பரிசு கிடைத்துக் கொண்டிருக்கிறதை நாம் காணுகின்றோமல்லவா?

சுமார் 120 பேர் இந்தியாவினின்று ஒரு வட்ட மேஜைக்குப் போவதாக வைத்துக் கொள்வோம். அதனால் பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகளுக்கும் கொள்ளை லாபம் கிடைத்து விடுகிறது. ஒரு காலத்தில் பண்டித மோதிலால் நேரு சட்ட சபையிலிருந்த போது இந்தியாவின் அரசியலை நிர்ணயிக்க வட்ட மேஜை மகாநாடு வேண்டுமென்று கேட்டது வாஸ்தவம் தான். ஆனால் அவர் உருப்படியாக வேலை செய்ய அறிந்தவர்கள் கூடி ஆலோசிக்க வேண்டுமென்ற கருத்தோடு தான் 'வட்ட மேஜை' என்ற எண்ணத்தையே தொடங்கினார். சமீபத்தில் சீமையில் நடந்தது போல டிராமாக்கள் நடத்துவதற்காக, அவர் 'வட்ட மேஜை' என்ற எண்ணத்தைக் கிளப்பவில்லை. சீமைக்குப் போய் நவராத்திரிக் கொலுப் பொம்மைகள் போல குந்துவதற்காக ஓர் பெரிய கும்பலை அனுப்ப வேண்டுமா? ஏழைகளின் வரிப் பணம் இப்படி கரைவதா?

தேய்ந்தக் காசுதான் அதிகமாகப் புரண்டு கொண்டிருக்கும் என்பார்கள். அதே மாதிரி அடிக்கடி எல்லா வட்ட மேஜைகளுக்கும், கூட்டுக் கமிட்டிகளுக்கும் போய்க் கொண்டிருப்பவர்கள் தேய்ந்த காசுகள் என்பது நன்றாய் விளங்குகிறது. ஆனால் ஒவ்வொரு தடவையும் இந்தியாவினின்று ஓர் படையை அனுப்பும் போது ஒவ்வொரு விதமான பெயரைக் கொடுக்கின்றனர். டெலிகேட், பிரதிநிதி, அஸ்ஸெஸர், ஆலோசனைக்காரன், சாக்ஷி என்று பல நிறுஸான பெயர்கள் தரப்படுகின்றன. ஆனால் யாவும் செல்லாக் காசு; தேசல் காசு. ஆனால் இந்தியாவின் வாஸ்தவமான தங்க நாணயமெல்லாம் சிறைக்குள் போடப்பட்டு பத்திரமாக பூட்டிடப் பட்டிருக்கின்றன. சர்க்கரையில்லாத போனால் மண்ணை 'ஸாம்பிள்' தருவது போலிருக்கிறது சர்க்கார் கூற்று.

அடாஸ் ராஜீய வாதிகளுக்கும், சுயநலமிகளுக்கும் இது காலமேயன்றி என்னை யார் கவனிப்பார்கள்? நான் வெயிலில் செத்தாலும் சாவேனேயன்றி, இந்த 'குலாம் கும்ப'லோடு லண்டன் போக மாட்டேன்.

அம்மை குத்துதல்

நாட்டில் அம்மை நோய் பலமாயிருந்து வருகிறது. அம்மைப் பாலைக் குத்திக்கொண்டால் அம்மை வரவே வராதென்று ஒரு மூட நம்பிக்கையை உண்டாக்குவதற்கு டாக்டர்கள் பிரயத்தனம் செய்து பார்த்தும் இது வரை பலிக்கவில்லை. 'மனிதன் அம்மைப் பாலைக் குத்திக்கொள்வது சரியன்று' என்று இப்போது அறிஞர் பலர் உலகத்தில் சிந்திக்கத் தலைப்பட்டு விட்டனர். நமது தலைவர் மகாத்மா காந்தியும் அம்மை குத்தும் இயக்கத்துக்கு ஒரு எதிரி தான். சமீபத்தில் (Anti Vaccination league) அதாவது, அம்மை குத்து எதிர்ப்புச் சங்கத்தைச் சேர்ந்த L. லோட் என்ற அறிஞர் பத்திரிகைகளுக்கு நீண்டதொரு கட்டுரை எழுதி அம்மை குத்தும் டாக்டர்களுக்கு அறிவுறுத்தி யிருக்கிறதாவது :—

இங்கிலாந்தில் தற்போது பாதி மக்கள் அம்மை குத்திக்கொள்ளவே யில்லை. அம்மை வியாதி வராமலிருப்பதற்கு அம்மை குத்திக்கொண்டே யாகவேண்டு மென்கிறார்கள். ஆனால் இப்போது அம்மை நோய் வராத ஊர்களில் அம்மை குத்திக் கொள்ளாதவர்களே இருக்கின்றனரே !

அம்மை குத்திக் கொண்டால் அம்மை போட்டாதென்பது தப்பான எண்ணம். 1930ம் வருஷத்தில் ஆஸ்திரேலியாவில் வைசூரி வந்தது. நோயாளிகளுக்கு உதவி செய்ய வந்த ஒரு நர்ஸுக்கு அம்மைப் பால் குத்தினார்கள். ஆனால் அவளுக்கும் வைசூரி போட்டி பதினேழு நாட்களில் இறந்து போனாள். அதே மாதிரி எவ்வளவோ இடங்களில் அம்மை குத்திக் கொண்டவர்களும் வைசூரி போட்டிச் செத்துப் போயிருக்கிறார்கள்.

1901-2 வருஷங்களில் லண்டனில் வைசூரி நோய் இருந்தது. 10 ஆயிரம் பேருக்கு நோய் கண்டது. அதில் 7000 பேருக்கு அம்மை குத்தினார்கள். அம்மை குத்தினவர்களில் 705 பேர் மரண மடைந்தனர். ஆகவே அம்மை குத்துவதனால் வைசூரியையும் தடுக்க முடியாது, சாவையும் தடுக்க முடியாது என்பது ஏற்படுகின்றது.

கல்கத்தாவின் வைசூரி வேகத்தைக் கவனிப்போம். பத்து லக்ஷம் மக்களுள் வைசூரி நோயினால் எத்தனை பெயர் செத்துப் போனார்களென்பதற்குக் கணக்குண்டு.

வருஷம்	கல்கத்தாவில்
1881—1890	386
1891—1900	648
1901—1910	1327
1911—1920	1029
1921—1930	1000

வருஷா வருஷம் கட்டாயமாக அம்மை குத்துதல் கண்டிப்பா யாகிக்கொண்டு வருகிறது. ஆனால் சாவோ குறைவதாகக் காணோம். ஏன் ? 1920-ம் வருஷத்தில் வைசூரியினால் கல்கத்தாவில் மட்டும் 2925 சாவுகள் ஏற்பட்டன. அப்போது அங்கு ஹெல்த் ஆபீசராயிருந்த டாக்டர் கிரெய்க் என்பார் "உஷ்ணப் பிரதேசங்களில் வைசூரியைத் தடுக்க அம்மை குத்தும் முறை பிரயோசன மற்றது என்ற கருத்து மிகையன்று" என்று கூறினார்.

ஜர்மன் தேசத்தில் கட்டாயமாக ஒவ்வொருவரும் அம்மை குத்திக் கொண்டே யாகவேண்டும். அந்த நாட்டில் தான் வைசூரி போட்டிச் சாகும் தொகையும் அதிகமா யிருந்திருக்கிறது.

பல வருஷங்களுக்கு முன்னே 'ஜன்னர்' என்பான் தான் வைசூரியைத் தடுக்க மருந்து கண்டு பிடித்து விட்டதாகவும் 30 ஆயிரம் பவுன் சன்மானம் வேண்டுமென்றும், தனது மருந்தை ஒருவன் ஒருதரம் குத்திக்கொண்டால் பிறகு அவனுக்கு வைசூரியே போட்டாதென்றும் கூறினான். அந்தப் பேச்சு அடியோடு இப்போது அநுபவத்தில் பொய்த்துப் போய் விட்டது. —பம்பாய் கிராணிகள்.

காலண்டர் கிலி

லாகூரில் ஸ்ரீயுத சைகள் என்ற புத்தக வியாபாரி 1933-ம் ஆண்டுக்கென்று தேசீயக் காலண்டர் ஒன்று வெளி யிட்டார். அதில் மகாத்மாஜி, ஜவஹர்லால், சுபாஷ் முதலியோரின் படங்க ளிருந்தன. போலீஸ் இலாகாவுக்கு ஏனோ இந்தக் காலண்டர் மீது கோபம் வந்தது ? 570 பிரதிகளை தூக்கிக் கொண்டு போலீஸார் போய் விட்டனராம்.

ஸைமன் கமிஷன் குட்டு வெளிப்பட்டது

ஒரு காலத்தில் இந்தியாவைச் சுற்றுப் பிரயாணம் செய்த ஸைமன் கமிஷனை நாம் மறந்திருக்க மாட்டோம். அந்த ஸப்த ரிஷிகளுள் மிஸ்டர் கோடகன் என்பாரும் ஒரு அங்கத்தினர். அவர் 'நாங்கள் கண்ட இந்தியா' என்று ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டிருக்கிறார். அதில் ஸைமன் கமிஷன் சம்பந்தமாக அநேக மர்மங்களை அவர் வெளியிட்டிருக்கிறார்.

"ஸைமன் கமிஷன் பூருவாக வெள்ளையர் மயமாக இருந்ததால் இந்தியர் அதைப் பகிஷ்கரித்தனர். இந்தியர்களை அக் கமிஷனில் சேர்த்துக் கொண்டால், ஏகோபித்த யாதாஸ்து வெளியிட முடியாதென்று பிரிட்டன் பயந்து இந்தியர்களை ஒதுக்கி விட்டது. இந்தியாவுக்கு 'குடியேற்ற நாட்டு' அந்தஸ்து தரவேண்டு மென்று ஒரு சிலர் சொல்லிக் கொண்டிருந்தனர். ஆனால் ஸைமன் பிரபுவோ வேணுமென்றே அந்தப் பதத்தை விலக்கிவிட்டு தமது யாதாஸ்தை வரைந்தார். ஆனால் எங்கள் கமிஷன் செய்த அத்தனை வேலையும் இன்றைக்கு வீணாகிவிட்டது. சுருக்கெழுத்துக்காரர்கள் எங்கள் நடவடிக்கைகளை யெல்லாம் பக்கம் பக்கமாக அப்போது வரைந்தார்கள். ஆனால் அத்தனையையும் இப்போது குப்பைத் தொட்டியில் தள்ளிவிட்டார்களே, என் செய்வது? இப்படி பிரயோசன மற்றுப்போன இக்காரியத்துக்கு செலவென்ன தெரியுமா? 2 லட்சம் பவுன்! வரி கொடுக்கும் இந்தியனுடைய பணத்தை இப்படி வாரி யிறைத்தால் அவன் ஆத்திரப்பட மாட்டானா என்ன?"

இவ்வளவும் அதே ஸைமன் கமிஷனில் அங்கத்தினராக வந்த மிஸ்டர் கோடகன் கருத்துக்களாகும். முன்னே பிரிட்டிஷார் 2 லக்ஷம் பவுன் வியர்த்தம் பண்ணியது போல இப்போது பல்லாயிரக் கணக்கான பவுன்களை கூட்டுக் கமிட்டிக்கு செலவிடப் போகிறார்கள். ஆனால் ஸைமன் கமிஷன் யாதாஸ்து அடைந்த கதியையே இந்தக் கூட்டுக் கமிட்டியின் முடிவும் அடையும் என்பதில் சந்தேகமில்லை. கமிஷன், கான்பரன்ஸு, கமிட்டி முதலிய மாய வித்தைகளால் பரந்த இந்தியா தேசத்தை எப்போதுமே ஏமாற்றிக் கொண்டிருக்க முடியுமா?

காங்கிரஸும், கூட்டுக் கமிட்டியும்

இந்திய தேசீய காங்கிரஸின் பொதுக் காரியதரிசியான ஸ்ரீயுத ஜயராம் தாஸ் தௌலத்ராம் ஒரு நிருபரிடம் பின்வருமாறு கூறி யிருக்கிறார்:

"கூட்டுப் பார்லிமெண்டரி கமிட்டியின் நடவடிக்கைகளின் முடிவு, காங்கிரஸ் கோரிக்கைகளை ஒருபோதும் நெருங்கி யிராது. 1932ல் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கு முன்னமே சர்க்காரின் இந்த விவகார முறையை காங்கிரஸ் நிராகரித்து விட்டது. காங்கிரஸின் கோரிக்கை இன்னதென்பதை லாகூர் காங்கிரஸ் வெளியிட்டது. கராச்சி காங்கிரஸ் வற்புறுத்திற்று. அந்தக் கோரிக்கைகளில் எதையும் சிறிதளவு கூட காங்கிரஸ்காரன் குறைக்க மாட்டான். ஆகவே சீமைக் கமிட்டியில் யார் யார் சாக்ஷிகளாகக் கலந்து கொள்கின்றனர், எவ்வாறு விவாதங்கள் நடை பெறுகின்றன. வென்பன பற்றி அக்கரை காட்டவேண்டாம். காங்கிரஸ் வாதிகள் லண்டனை நோக்கிக் கொண்டிருக்க வேண்டாம். வாஸ்தவமான வேலை நம் நாட்டிலேயே செய்யவேண்டி யிருக்கிறது."

ருஷியாவில்—இந்தியாவில்

"மாஸ்கோவில் பிரிட்டிஷார் சிலர் விசாரிக்கப்படுவதைப் பற்றிக் கேள்விப் படுகிறோம். ஆனால் அதே சமயத்தில் யாதொரு விசாரணையுமின்றி பதினாயிரக் கணக்கான பேர் இந்தியச் சிறையில் அடைந்து கிடக்கின்றார்களே; 2 ஆங்கில இளைஞர்கள் (மீரத் சதி வழக்கில்) இன்னமும் விசாரிக்கப்பட்டு வருகின்றார்களே இவர்களைப் பற்றிக் கேள்வி கேட்பாரில்லையா?" என்று ஜார்ஜ் லான்ஸ்பரி ஒரு நிருபரிடம் கூறி யிருக்கிறார்.

பர்மாவில் போங்கிகள்

பர்மாவில் புத்த மதப் பிரசாரகர்களாக இருப்பவர்களுக்கு 'போங்கிகள்' என்று பெயர். தாராவாடி சிறையில் கைதிகளா யிருந்த சில போங்கிகள் அணிந்திருந்த காஷாயத்தை ஜெயிலதிகாரிகள் பிடுங்கிக் கொண்டதால் கைதிகள் உண்ணா விரத மிருப்பதாகத் தெரிகிறது. தாராவாடி ஜில்லாவில் வரி கொடா இயக்கப் பிரசாரம் செய்ததாக ஒரு போங்கி மீது வழக்கு நடை பெற்று வருகிறது.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.